# Worksheet 3 for Academic year (2025 - 2026)

**Grade : 6**

**Subject: Tamil ( தமிழ் )**

**Date** _______________

I) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. ‘தட்பவெப்பம்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………
அ) தட்பம் + வெப்பம் ஆ) தட்ப + வெப்பம் இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

2. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது …………..
அ) வேதி + யுரங்கள் ஆ) வேதி + உரங்கள் இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்

3. தரை + இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………….
அ) தரையிறங்கும் ஆ) தரை இறங்கும் இ) தரையுறங்கும் ஈ) தரைய்றங்கும்

4. வழி + தடம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ………….
அ) வழிதடம்பஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ………………
அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

II) நிரப்புக

1. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ………………
2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் ………………
3. பறவைகள் இடம்பெயர்வதற்கு ………………….. என்று பெயர்.
4. இந்தியாவின் பறவை மனிதர் ………………
5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ……………..
6. புள் என்பதன் வேறு பெயர் பறவை …………….
7. பறவைகள் இடம்பெயர்தல் ………………
8. சரணாலயம் என்பதன் வேறு பெயர் ……………

III) வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக:

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.

2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.

3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.

4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலிம் அலி பறவை

IV) சொற்றொடர் அமைத்து எழுதுக

1. வெளிநாடு:
2. வாழ்நாள்:
3. செயற்கை:

V) தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக

1. பல நாட்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

2. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.

3. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

VI) மொழிபெயர்ப்பு:

1. Migration
2. Sanctuary
3. Gravitational field

VII) குறுவினா:

1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?
2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
3. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?
4. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?
5. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?

VIII) சிறுவினா:

1. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?
2. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.